www.Padasalai.Net www.TrbTnpsc.com

NP

**சுருக்கம்**

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் 2025–26 ஆண்டுக்கான அறிவிப்பு – 2025–26 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.60 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–1) துறை**

**அரசாணை(நிலை) எண்.47**

**நாள்: 28.03.2025**
**குரோதி, பங்குனி 14**
**திருவள்ளுவர் ஆண்டு– 2056**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி–1) துறை, நாள் 20.04.2023.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.82472/2024/ சி.டி.எஸ்–2, நாள் 15.02.2025.
3. மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் 2025–26ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கூட்டத் தொடரின் அறிவிப்பு

----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2022–23ஆம் ஆண்டுக்கான பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த ரூ.194.65 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஆணை வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் 2025–26ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கூட்டத்தொடரில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

"கடந்த நான்கு ஆண்டுகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் பெருமளவில் பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. 2025–26ஆம் ஆண்டிலும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பழுது பார்த்தல் மற்றும்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

புனரமைப்பு பணிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்".

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், 2022-23 ஆம் ஆண்டில், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளதாகவும், அதன்படி, 2025-26 ஆம் ஆண்டில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்தும் மற்றும் ரூ.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் உரிய அரசாணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை கவனமாகப் பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ள முடிவு செய்து, அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது:-

(i) 2025-26 ஆம் ஆண்டில், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திட ரூ.60 கோடிக்கு (ரூபாய் அறுபது கோடி மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

(ii) 2025-26ஆம் ஆண்டில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திட இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றிட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக),
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக).
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக).
ஆணையர், கருவூலக் கணக்கு அலுவலகம், சென்னை-35.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை-108.
மாநில தலைமை கணக்காயர், சென்னை - 18/35.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமை செயலகம்), சென்னை-9.

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு/ வடக்கு/ தெற்கு), சென்னை-8/1/35.

சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.

அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

தேசிய தகவல் மையம், சென்னை-9.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், நிதித் துறை, சென்னை-9.
நிதி (வரவு-செலவு-I/வரவு-செலவு- II/உட்கட்டமைப்பு-IV) துறை, சென்னை- 9.
இருப்பு கோப்பு/ உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

www.Padasalai.Net

**அரசாணை (நிலை) எண்.47, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி.1) துறை, நாள் 28.03.2025**

**இணைப்பு**

**பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் 2025-26 ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

**1. முன்னுரை**

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் சொத்தாகும். இப்பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-ல் பிரிவு 112ன் படி, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும்.

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை பராமரித்தல், பழுதுபார்த்தல், புனரமைத்தல் மற்றும் பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை புதுப்பித்துத் தருவதே பள்ளி உட்கட்டமைப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் மேம்பாட்டைப் படிப்படியாக உயர்த்த வழிவகுக்கும்.

**2. பணிகளைத் தேர்வு செய்தல்**

அ. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-II(AGAMT-II) செயல்படுத்த, தேர்ந்தெடுக்கப்பட்ட 2,388 கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளையும், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (2025-26) கொண்டுவரப்பட வேண்டும்.

ஆ. பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகள் மேற்கொள்வதற்கு முன் கட்டடத்தின் உறுதித் தன்மை குறித்து உதவி செயற்பொறியாளரின் (ஊரக வளர்ச்சி) சான்று பெறப்பட வேண்டும்.

இ. கடந்த ஐந்தாண்டுகளில் வேறு எவ்வித திட்டத்திலும் பழுதுநீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்படாத ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் (Structure wise) மட்டுமே தேவையின் அடிப்படையில் பழுதுநீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**3. பழுது நீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகளின் வகைப்பாடு**

2025-26ஆம் ஆண்டில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்-IIன்கீழ், கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளையும் ஆய்வு செய்து, பள்ளி வளாகத்தில் உள்ள வகுப்பறைக் கட்டடங்கள், சமையலறைக் கூடங்கள், கழிப்பறைகள் மற்றும்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

குடிநீர் வசதி உள்ளிட்ட அனைத்து பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை பழுதுநீக்கம் மற்றும் புனரமைத்தல் பணிகள் தொடர்பாக முறையான ஆய்வின் மூலம் கண்டறிந்து, திட்ட முன்மொழிவில் சேர்க்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

பள்ளிகளில் ஏற்கனவே இருக்கும் வசதிகளில் உள்ள பழுதுகளை பழுதுநீக்கம் செய்வதற்கு, கீழ்க்காணும் முன்னுரிமையின் அடிப்படையில் பணிகள் எடுக்கப்பட வேண்டும்.

**அ) ஏற்கனவே உள்ள பள்ளி வகுப்பறை கட்டடங்களை பழுதுநீக்கம் செய்தல்**

கீழ்க்கண்ட பணிகள் அனுமதிக்கப்படுகிறது.

i. பழுதடைந்த சாய்தளங்களை பழுதுநீக்கம் செய்தல், படிக்கட்டுகள் மற்றும் கைப்பிடியுடனான புதிய சாய்தளத்தினை அனைத்து கட்டடங்களிலும் அமைத்தல்.

ii. பழுதடைந்த கான்கிரீட் கூரைகளை பழுதுநீக்கம் செய்வதற்கான பணியினை மேற்கொள்ளும்போது (தண்ணீர் கசியாத வகையில் சுண்ணாம்பு செங்கல் கலவை (Weathering course) சேர்த்தல் அல்லது தட்டு ஓடு பதித்தல் போன்றவை), மழைநீர் சேகரிப்பு தொட்டி இல்லாமல் இருப்பின் அல்லது பழுதடைந்திருப்பின், அவ்விடங்களில் அந்த வசதியை ஏற்படுத்தித் தரலாம்.

iii. ஓடுகள் வேய்ந்த கூரைகளைக் கொண்ட கட்டடங்களில், சேதமடைந்த ஓடுகள்/ விட்டங்கள்/ சாரம் கட்டும் மரங்களைச் சரிசெய்தல்.

iv. தற்போது சேதமடைந்துள்ள மங்களூர் ஓடு வேயப்பட்ட கட்டடங்களில், மீண்டும் அதே கூரை அமைக்க முடியாத நிலையில் இருந்தால், அவைகளை வெப்பத்தையும், ஒலி மாசுவையும் குறைப்பதற்காக PUF (Poly Urethane Foam) panel மூலம் கூரையினை மாற்றி அமைக்கலாம். கூரையின் அமைப்பிற்கு தகுந்தவாறு, தற்போதுள்ள வளைய அமைப்பை மீண்டும் தேவையான சாய்வுக்கு மாற்றி அமைக்கலாம்.

v. தேவைக்கு ஏற்ப கான்கிரீட் கூரையைப் பழுதுநீக்கம் செய்தல்.

vi. கட்டட சுவர்களில் ஏற்பட்ட விரிசல்களைப் பழுதுநீக்கம் செய்தல்.

vii. பழுதடைந்த கதவுகள் மற்றும் சன்னல்களைப் பழுதுநீக்குதல்/ மாற்றியமைத்தல்.

viii. பழுதடைந்த தரையை வழுக்காத Shahabad மற்றும் கோட்டா (Kotta) கற்பலகை மூலம் பழுதுநீக்குதல்/மாற்றியமைத்தல்.

ix. தேவைப்படும் இடங்களில் கரும்பலகைகளுக்கு வண்ணம் பூசுதல். கரும்பலகைகளை புதிதாக மாற்றும் பட்சத்தில், பின்புறத்தில் அலுமினியத் தகடு பொருத்தப்பட்ட Magnetic Steel Ceramic பச்சை எழுத்துப் பலகையாக மாற்றியமைக்கலாம்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

x. மின்கம்பிகளில் பழுதுபார்த்தல்/ மாற்றுதல்: மின்பொருத்துதல்களில் இடையூறு உள்ள இடங்கள், மின்கம்பிகள் மற்றும் தற்போதுள்ள வகுப்பறைகளை எதிர்காலங்களில் நுண்திறன் வகுப்பறைகளாக (Smart classrooms) மேம்படுத்துவதற்கு தேவைப்படும் மின் வசதிகளை ஏற்படுத்தலாம்.

xi. கட்டடங்களுக்கு உள்ளே எண்ணெய் கலந்த வண்ணங்களும் (oil bound distemper) கட்டடங்களுக்கு வெளியே எமெல்சன் (emulsion) வண்ணங்களும் பயன்படுத்தப்பட வேண்டும். (கடந்த 3 வருடங்களுக்குள் எந்தவொரு பிற திட்டங்களின்கீழ், கட்டடங்களுக்கு வெள்ளை/வர்ணம் பூசுதல் பணி மேற்கொள்ளப்பட்ட பள்ளிகள் தவிர).

xii. கல்வித்துறை ஆணையர் அவர்களின் நேர்முக கடித எண்.045822/CSE/2022, நாள்: 12.08.2023ன்படி மாணவர்களுக்கு படங்களுடன் கூடிய எண் அல்லது எழுத்துகளைக் கொண்ட அடிப்படைக் கல்விக் கருத்துக்களை, பாலா ஓவியங்கள் (BaLA paintings) மூலம் காட்சித் தகவலாக சுவர்களில் வரைந்து கொடுக்கப்பட வேண்டும்.

**ஆ) ஏற்கனவே உள்ள சமையலறைகளை பழுது நீக்கம் செய்தல்**

பழுதடைந்த ஆனால் கட்டமைப்பு உறுதியான நிலையிலுள்ள சமையலறைக் கூடங்கள், 3 வருடங்களுக்குள் பிற திட்டங்களின்கீழ் பழுதுநீக்கப் பணி மேற்கொள்ளப்படாதிருப்பின், பழுதுநீக்கம்/புதுப்பித்தல் பணியை மேற்கொள்ளலாம்.

**இ) ஏற்கனவே உள்ள கழிப்பறைகளை பழுது நீக்கம் செய்தல்**

ஏற்கனவே உள்ள கழிப்பறைகளில் கீழ்க்கண்ட பழுதுநீக்கப் பணிகளை எடுத்துச் செய்யலாம்.

i. பள்ளி கழிப்பறைகளின் கான்கிரீட் கூரை, சுவர், தரை, வடிகால், கழிப்பறை கோப்பை, கை கழுவும் தொட்டி, கழிவுநீர்த் தொட்டி மற்றும் பிறவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுதுநீக்கம்/ புனரமைத்தல் பணிகளைச் செய்யலாம்.

ii. தேவை ஏற்படும் இடங்களில், தரையில் வழுக்காத தரை ஓடுகள் (Anti-slippery Tiles) பதிக்கலாம். குறுகிய காலத்தில் தரைகளில் கறை ஏற்படும், குறிப்பாக மழைக்காலங்களில் என்பதால், தரை ஓடுகளின் நிறம் வெள்ளையாகவோ அல்லது வெளிர் நிறமாகவோ இருக்கக் கூடாது.

iii. கழிப்பறைகளில் குழாய் அல்லது நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

iv. கழிப்பறைகளுக்கு வெள்ளை/வர்ணம் பூசலாம். (3 வருடங்களுக்குள் பிற திட்டங்களின்கீழ் வெள்ளை/வர்ணம் பூசப்பட்ட கழிப்பறைகள் தவிர)

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

ஈ) ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகளுக்கான பழுது நீக்கம் செய்தல் பணிகள்

NP

i. பள்ளிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது பார்க்கப்பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

ii. தேவை ஏற்படும் இடங்களில் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளலாம்.

iii. ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் அனைத்து கழிப்பறைகளிலும் கட்டாய தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

iv. புதிய குடிநீர் இணைப்புகள் தேவைப்படின், அருகிலுள்ள குடிநீர் இணைப்புகளிலிருந்து அல்லது ஊராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து, சிறிய மேல்நிலை சேகரிப்பு தொட்டியுடன் கூடிய வசதி செய்து கொள்ளலாம். பிற பயன்பாடுகளுக்கு ஆழ்துளை கிணற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

v. சின்டெக்ஸ் (Syntax water tank) தொட்டிகள் மட்டுமே அமைக்கப்பட வேண்டும். சிமெண்ட்/கான்கிரீட் தொட்டிகள் தவிர்க்கப்பட வேண்டும். தேவையான இடங்களில் புதிய ஆழ்துளை கிணறு நீர்த்தேக்கத் தொட்டியுடன் அமைக்கலாம்.

vi. தேவையான இடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் கட்டலாம்.

4. <u>பணிகள் தேர்வு செய்தல் மற்றும் இறுதி செய்தல்</u>

அ. பணிகளை தேர்வு செய்து, இறுதி செய்கையில் கீழ்க்கண்ட செயல்முறைகளை கடைபிடித்தல் வேண்டும்.

i. எடுக்கப்பட வேண்டிய பணிகள் குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியல் தயார் செய்ய கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட வேண்டும்.

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி)
2. உதவிப் பொறியாளர் (ஊரக வளர்ச்சி)/ஒன்றியப் பொறியாளர்/ இளநிலைப் பொறியாளர்
3. சம்பந்தப்பட்ட வட்டாரக் கல்வி அலுவலர்
4. பள்ளித் தலைமையாசிரியர்
5. சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் / தனி அலுவலர்

ii. மேற்படி குழு உறுப்பினர்கள், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி வளாகங்களில் உள்ள கட்டடங்கள் பயன்பாடுகள், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை ஆய்வு செய்து, தேவைப்படும் பணிகளின் பதிவுகளை EMIS (Educational Management Information System)–ல் பதிவேற்றம் செய்ய வேண்டும். (பள்ளி தலைமையாசிரியர் / தலைமை ஆசிரியை EMIS–ல் பதிவேற்றம் செய்வர்). இக்குழுவானது,

www.Padasalai.Net

ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் எடுக்கப்பட வேண்டிய பணிகளின் பட்டியலை இறுதி செய்ய வேண்டும்.

iii. பழுதுபார்த்தல் பணிகளை இறுதி செய்ய வேண்டி, விரிவான "மதிப்பீட்டுத்தாள்" ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் அனுப்பி வைக்கப்படும்.

iv. பணிகளின் பட்டியல், குழுவால் இறுதி செய்யப்பட்டவுடன், அவை tnrd. (SIUS module) இணையதளத்தில், பதிவேற்றம் செய்யப்படும்.

ஆ. ஒரு குறிப்பிட்ட பள்ளிக் கட்டடம், சமையலறைக்கூடம் அல்லது கழிப்பறை, சிதிலமடைந்த நிலையில் இருந்தால், அதற்கு பதிலாக புதிய கட்டடம் தேவை என குழு கருதினால், தற்போது உள்ள கட்டடத்தை இடிக்க பரிந்துரை செய்யலாம். அதன்படி, அரசாணை (நிலை) எண்.56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–4) துறை, நாள் 03.04.2008 மற்றும் அரசாணை (நிலை) எண்.28, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.4) துறை, நாள் 23.02.2015–ல் வெளியிடப்பட்டுள்ள திருத்தம் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, உரிய வழிமுறைகளை பின்பற்றி கட்டடத்தை இடிக்க செயற்பொறியாளர்(ஊ.வ) உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இ. இப்பணிகளின் முன்னேற்றத்தை tnrd. இணையதளத்திலுள்ள SIUS moduleல் தொடர்ந்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

<u>5. பரிந்துரை செய்யப்பட்ட பணிகளை சோதனை சரிபார்ப்பு செய்தல்</u>

மதிப்பீடு தயாரிப்பதற்கு, ஆரம்பம் முதல் முறையான கள ஆய்வு மேற்கொள்வது அவசியம் ஆகும். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பணிகளை, சோதனை முறையில் சரிபார்த்தால்தான் சரியான மதிப்பீடு தயாரிக்க ஏதுவாயிருக்கும். சோதனை சரிபார்த்தல் (Test check) பணியின் போது கீழ்க்கண்டவைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

i. பழுதுபார்க்கும் பணிகளில் தேவையான இனம் எதுவும் விடுபடாமல் சேர்க்கப்பட்டுள்ளது.

ii. பணிகளில் தேவையில்லாத இனம் சேர்க்கப்படவில்லை.

iii. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

iv. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படாத இனம் எதுவும் சேர்க்கப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

கட்டிடங்களின் தேர்வு மற்றும் பழுதுபார்ப்பு வகையின் சரியான தன்மையை பின்வரும் அதிகாரிகள் கீழே விவரிக்கபட்டுள்ளபடி சரிபார்க்க வேண்டும்:–

| | | | |
|---|---|---|---|
| i. | மாவட்ட ஆட்சியர் | : | 1% |
| ii. | கூடுதல் ஆட்சியர்(வ)/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | : | 10% |
| iii. | செயற்பொறியாளர் (ஊ.வ) | : | 20% |

www.Padasalai.Net

உதவி இயக்குநர்/உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) நிலையில் உள்ள அலுவலர்களால் 100% சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 6. நிர்வாக அனுமதி

நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்கும் முன் ஒவ்வொரு கருத்துருவுடனும் கீழ்க்கண்ட ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

i. பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்குழுவின் உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட "மதிப்பீட்டுத் தாள்".

ii. பத்தி எண் 4-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மாவட்ட அளவிலான அதிகாரிகளால் தேவையான சதவீத சோதனை சரிபார்ப்பும், உதவி இயக்குநர்/உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) நிலை அதிகாரிகளால் 100% சரிபார்ப்பும் திருப்திகரமாக முடிக்கப்பட்டுள்ளன.

iii. ஒவ்வொரு பணிக்கும் விரிவான மதிப்பீடு தயார் செய்ய வேண்டும். எத்தகைய நிலையிலும் தோராய மதிப்பீட்டின் அடிப்படையில், கருத்துரு அனுப்புதல் கூடாது.

iv. பள்ளிக் கட்டடம்/சமையலறைக் கூடம்/கழிப்பறைக் கட்டடங்களின் உள், வெளி மற்றும் மேற்புறத்தோற்றத்தின் பல்வேறு புகைப்படங்கள் மதிப்பீட்டுடன் இணைக்கப்பட வேண்டும். புகைப்படங்கள் இணைக்கப்படவில்லையெனில், மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்வாக அனுமதி வழங்கப்படக் கூடாது.

குறிப்பு –

பணிகளின் எண்ணிக்கையை உறுதி செய்யும் நோக்கத்திற்காகவும் அல்லது பணிகளின் விரிவான மதிப்பீடுகள் பெறவும் பணிகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:–

- ஒரு பள்ளி வளாகத்திற்குள் உள்ள அனைத்து பள்ளிக் கட்டடம் / வகுப்பறைகள் பழுதுநீக்கம் செய்வதை ஒரே பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளி வளாகத்திற்குள் உள்ள அனைத்து கழிப்பறைகளையும் பழுதுநீக்குவதை ஒரே பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளி வளாகத்திற்குள் உள்ள சமையலறைக் கூடம் பழுதுநீக்கம் செய்யும் பணிகள் அனைத்தையும் ஒரே பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.
- ஒரு பள்ளி வளாகத்திற்குள் பழுதுபார்க்கப்படும் அனைத்து குடிநீர் வசதிக்கான பணிகளையும் ஒரே பணியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**7. தொழில் நுட்ப அனுமதி**

அரசாணை (நிலை) எண். 106, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ1(1)) துறை, நாள் 22.06.2024ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி தகுதிவாய்ந்த அலுவலரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட வேண்டும்.

**8. பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி**

ஒப்பந்தப்புள்ளி நடைமுறையில் ஒப்பந்தப்புள்ளி விதிகளை கவனமாக பின்பற்ற வேண்டும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.41303/2021/TU3, நாள் 16.08.2023ன்படி, ரூ.10 இலட்சத்துக்கும் அதிகமான அனைத்து கொள்முதல்களுக்கும் இ-டெண்டர் முறை பின்பற்றப்பட வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) ஒப்பந்தப் புள்ளி கோரும் மற்றும் ஏற்கும் அதிகாரம் உடையவராவார்.

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும். அரசாணை (நிலை)எண். 106, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ1(1)) துறை, நாள் 22.06.2024-ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகள், சரக்குகள், சேவைகள் வழங்கல் மற்றும் செயல்முறைக்கான திட்டங்களையும் மதிப்பீடுகளையும் மற்றும் ஒப்பந்தங்களுக்கான நிலைமைகளையும் தயாரித்தல்) விதிகள் 2024-ன் அறிவிக்கை II-ல் கண்டுள்ள அட்டவணை I மற்றும் II-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப் புள்ளி கோரும் மற்றும் ஏற்கும் அதிகாரத்தை செயல்படுத்த வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி கோரும்பொழுது, ஒரு பள்ளி வளாகத்திற்குள் உள்ள அனைத்து பராமரிப்பு/பழுதுநீக்கம் செய்யும் பணிகளை, ஒரே பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு பள்ளியில், கட்டடம் பழுதுநீக்கம்/ கழிப்பறை பழுதுநீக்கம்/ சமையலறைக் கூடம் பழுதுநீக்கம் ஆகிய பணிகள் ஒரே தொகுப்பாக கணக்கிடப்பட்டு, அத்தொகுப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும்.

**9. செயல்படுத்தும் நடைமுறை**

அரசாணை (நிலை) எண். 106, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ1(1)) துறை, நாள் 22.06.2024-ன்படி, இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு அளவீடு மற்றும் மேலளவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

**10. நிதி**

மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து தேவையின் அடிப்படையில் பெறப்படும் மதிப்பீட்டுத் தொகையின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால், மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கென பராமரிக்கப்படும் ஒற்றைச்சாளர

வங்கிக் கணக்கில் (Single Nodal Account) வைக்கப்பட்டிருக்கும் இத்திட்டத்திற்கான நிதியை முன்னேற்றத்தின் அடிப்படையில் செலவினங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் அங்கீகரிக்கப்படும்.

**11. தரக்கட்டுப்பாடு**

பணிகளை செயல்படுத்தும் நிறுவனம், அனைத்து கட்டுமானப் பொருட்களையும் சோதனை செய்வதற்கு தரக் கட்டுப்பாட்டுப் பதிவேட்டையும் மற்றும் பணித்தள பதிவேட்டையும் பராமரிக்க வேண்டும். இப்பதிவேடுகளை ஆய்வு அலுவலர்களால் அவ்வப்போது சரிபார்க்கப்பட வேண்டும். மேற்கண்ட தரக்கட்டுப்பாட்டு முறையை தவிர, இந்தத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளின் தரத்தைக் கண்காணிப்பதற்காக சுதந்திரமான மூன்றாம் தரப்பு கண்காணிப்பாளர்கள் அதாவது மாநிலத் தரக் கண்காணிப்பாளர்கள் (திட்டங்கள்) நியமிக்கப்பட வேண்டும்.

**12. ஆவணப்படுத்துதல்**

இத்திட்டத்தில் பணிகளை அடையாளம் காண்பதில் தொடங்கி, பணிகள் செயல்படுத்தப்படும்போதும், பணிகள் நிறைவடையும் வரையிலான அனைத்து விரிவான, பலவிதமான நிலைகளும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். பணி முடிக்கப்பட்ட பின்பு, பள்ளி பழுதுபார்ப்பு/புதுப்பிப்பு பணிகள் நிறைவடைந்துள்ள விவரம், திட்டத்தின் பெயர், அதாவது, **"பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்"**, செலவிடப்பட்ட தொகை ஆகியவை புனரமைக்கப்பட்ட கட்டடத்தின் ஒரு பகுதியில், தெளிவாக நன்கு தெரியும் வண்ணம் தமிழில் எழுதப்பட வேண்டும். பணிகள் முடிவுற்றதும், தெளிவான புகைப்படங்கள் (High Resolution Photographs) tnrd. இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். பணிமுடிவுற்ற பின்னர் தெளிவான புகைப்படங்களை (High Resolution Photographs) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு உடனடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**13. வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுக்கு மேற்காணும் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைகளுக்கேற்ப ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரை கலந்தாலோசித்து, தேவையான மாற்றங்களை செய்ய அதிகாரம் உள்ளது.

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

**G.O.(Ms) No.47, RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ (SGS.1) DEPARTMENT, DATED 28.03.2025**

**ANNEXURE**

**Guidelines for School Infrastructure Upgradation Scheme (SIUS) 2025-26 (Palli Utkattamaippu Membattu Thittam)**

## 1. INTRODUCTION

Panchayat Union Primary and Middle Schools located in Village Panchayat and Town Panchayat are the property of the Panchayat Unions concerned. As per section 112 of the Tamil Nadu Panchayats Act, 1994, it is the responsibility of the Panchayat Unions concerned to ensure the maintenance of infrastructure facilities in these schools.

The School Infrastructure Upgradation Scheme (SIUS) aims to facilitate discharge of the above statutory obligations of the Panchayat Unions and ensure the maintenance and renovation of existing infrastructure facilities in the Panchayat Union Primary and Middle Schools located in rural areas.

The programme envisages improvement of all the Panchayat Union Primary Schools and Middle Schools in Village Panchayats in a phased manner.

## 2. SELECTION OF WORKS

a. All the Panchayat Union Primary and Middle Schools located in 2,338 Village Panchayats identified for Anaithu Grama Anna Marumalarchi Thittam– II (AGAMT-II) 2025-26 should be covered under SIUS 2025-26.

b. Before taking up repair and renovation works of the existing building, a certificate of structural stability shall be issued by the Assistant Executive Engineer (RD) concerned.

c. Repair and renovation work required shall be taken up only in those Panchayat Union Schools (Structure wise) for which repair and renovation works have not been carried out in the last 5 years under any other Scheme.

## 3. TYPE OF REPAIR AND RENOVATION WORKS

All PUPS and PUMS located in the Anaithu Grama Anna Marumalarchi Thittam–II 2025-26 Village Panchayats should be inspected and also to be ensured that all school infrastructure facilities in the school campus such as Classroom buildings, Kitchen sheds, Toilets, Water supply which require repair/renovation are included in the proposal without any omission through proper inspection.

The repair to the existing facilities inside the school shall be taken up strictly in the following order of priority: -

**A. Repairs to existing school classroom**

The following works are permitted,

i. Repair/ new/ replacement of ramp and steps with hand rails to all buildings.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

ii. Undertaking repairs of RCC Roof (in terms of laying weathering course with pressed tiles or taking up leak proofing etc.,) along with provisions of rainwater harvesting wherever the provisions are not available are damaged.
iii. Repairs of damaged tiles/ rafters/ reapers in buildings with tiled roofing.
iv. The existing damaged buildings with Mangalore tiled roof, which are beyond the scope of being re-roofed should be replaced with Polyurethane Foam Panel (PUF panel) for thermal proof and noise insulation. The existing truss system can be re-fabricated to the required slope if necessary.
v. Repairs to RCC ceiling as per the requirement.
vi. Repairs to cracks in building walls.
vii. Repair/ replacement of doors and windows.
viii. Repair/ replacement of damaged flooring with anti-skid Shahabad stones/ Kotta stones.
ix. Painting of Black boards may be taken up wherever required. In case of replacement, provision of magnetic steel ceramic green writing board of required size with aluminum sheet back covering shall be provided.
x. Repair/replacement of wiring: Where there are issues with electrical fittings, wiring and electrical provision may be taken up for future upgradation with smart classroom facility.
xi. Colour washing of the buildings with interiors using oil bound distemper and exterior using emulsion should be done (except those buildings where white washing/colour washing was done within the last 3 years under any other Scheme)
xii. As per the Commissioner, School Education Department, D.O.Letter No.045822/ CSE/2022, dated 12.08.2023, BaLA painting may be provided to impart visual information to children on basic educational concepts which can be pictorial, numerical or alphabetic information.

**B. Repairs to existing Kitchen sheds**

Existing kitchen shed buildings which are in damaged condition, can be repaired and renovated, if it is structurally stable and no repair was done in the last 3 years under any other Scheme.

**C. Repairs to existing toilets**

The following repair works in existing toilets shall be taken up,

i. The repairs and renovation of the existing toilets like repairs to roof, walls, floors, drains, squatting pans, washbasins, septic tanks etc.
ii. Wherever required, floors may be paved with Anti-skid tiles. The color of tiles should not be white or have very light colors which tend to get stains in a short period, especially the rainy season.
iii. Water supply facility should be provided in the toilets, either by providing taps and/or constructing water storage tank.

www.Padasalai.Net

iv. White washing and colour washing of the toilets should be done (except those toilets, where white washing/ colour washing was done within the last 3 years under any other Scheme).

**D. Repairs to existing water supply works**

i. If the existing water supply system is damaged, repairs should be carried out to provide water supply to the school.
ii. Extension of pipeline work may be taken up wherever required.
iii. Water supply facilities are mandatory in all toilets in PUPS and PUMS.
iv. If required, new drinking water supply connection may be provided from the nearby water supply line or Over Head Tank (OHT) of the Panchayat along with a small overhead storage tank. Bore well water can be provided for other utilities.
v. The tanks being installed should be Syntax tanks and providing Cement concrete tanks should be avoided. Wherever necessary, new borewell can also be taken up along with a storage tank.
vi. Wherever necessary, Rainwater Harvesting Structure (RWH) shall be constructed.

## 4. SELECTION AND FINALIZATION OF WORKS

**A.** With regard to the selection and finalization of works, the following procedures have to be followed:

i) A Committee comprising of the following members should be constituted to list out the details of work to be done.
   1. Block Development Officer (Block Panchayat).
   2. Assistant Engineer (RD)/ Union Engineer/ Junior Engineer.
   3. Block Educational Officer (BEO) concerned.
   4. Headmaster of the school.
   5. Concerned Village Panchayat President/Special Officer.

ii) The above Committee members should inspect each and every building, if utilities and play ground in the school campus, update the requirements in the Educational Management Information System (EMIS) (the Headmaster/ Headmistress of the school shall do this work) and finalize the requirements and list of works to be taken up in the PUPS and PUMS.

iii) The details required to finalize the repair works shall be communicated to the Districts as "Assessment Sheet" by the Commissioner of Rural Development and Panchayat Raj.

iv) Once the works are finalized by the Committee, the same shall be uploaded in the tnrd. website (SIUS module).

**B.** If the Committee is of the opinion that a particular school building, kitchen shed or toilet is in dilapidated condition and requires total replacement, the

Committee shall recommend for demolition of the building. Accordingly, the Executive Engineer (RD) shall take necessary action for demolition of the building after following the due procedures stipulated in G.O.(Ms) No.56, Rural Development and Panchayat Raj (SGS-4) Department, dated 03.04.2008 and amendment issued vide G.O.(Ms) No.28, Rural Development and Panchayat Raj (SGS-4) Department, dated 23.02.2015.

C. The progress of the works shall be uploaded on the SIUS module on the tnrd. website regularly.

## 5. TEST VERIFICATION OF THE WORKS PROPOSED

It is imperative that, from the beginning itself extensive field visits backed by proper test checks should be undertaken at the stage of preparation of estimates itself which would facilitate in preparing exact estimates. During the test check, the following should be ensured: -

i) Any essential item of repair works are included without omission.
ii) Unnecessary items of work are not included.
iii) Detailed estimates have been prepared.
iv) Any item not permitted in this Scheme has not been included.

The correctness of selection of buildings and type of repairs should be test verified by the following officials as detailed below:-

| | | | |
|---|---|---|---|
| i) | District Collector | - | 1% |
| ii) | Additional Collector (Dev.)/ Project Director, DRDA | - | 10% |
| iii) | Executive Engineer (RD) | - | 20% |

100% verification should be done by the officers in the level of Assistant Director / Assistant Executive Engineers (RD).

## 6. ADMINISTRATIVE SANCTION

The Administrative Sanction shall be accorded by the District Collector. Before according Administrative Sanction, the District Collector should ensure that every proposal for Administrative Sanction contains the following:

i) "Assessment sheet" duly signed by members of the Selection Committee as mentioned in paragraph No.3
ii) Required percentage of test check by District Level Officials and 100% verification by Assistant Director/Assistant Executive Engineer (RD) level officers have been satisfactorily completed as mentioned in paragraph No. 4.
iii) Detailed estimates for each work should be prepared. In any case, no work should be proposed as per rough cost estimate.
iv) Multiple photographs indicating inner, outer view and top view of the school building, kitchen shed/toilet should be taken and enclosed along with the

www.Padasalai.Net

estimate itself. If photographs are not enclosed, Administrative Sanction should not be given by the District Collector.

**Note:** For the purpose of fixing number of works or to have comprehensive estimates, the works may be treated as follows: -

- All school building / classroom repairs, in the school campus shall be treated as one work.
- All toilet repairs in the school campus shall be treated as one work.
- All kitchen shed repairs in the school campus shall be treated as one work.
- All water supply repair works in the school campus shall be treated as one work.

## 7. TECHNICAL SANCTION

Technical Sanction should be accorded by the competent authority as per G.O.(Ms) No.106, Rural Development and Panchayat Raj (PR-1) Department, dated 22.06.2024.

## 8. TENDERING OF WORKS

Tender rules should be scrupulously followed in the tendering process. E-tendering should be followed for all procurements costing more than Rs.10 Lakhs as per the Director of Rural Development and Panchayat Raj Letter No.41303/2021/TU3, Dated 16.08.2023. The Block Development Officer (Block Panchayat) shall be Tender Inviting as well as Tender Accepting Authority.

The Tamil Nadu Transparency in Tenders Act, 1998 and Rules, 2000 shall be adopted for tendering. The provisions of Table I and Table II of Notification II in the Tamil Nadu Panchayats (Preparation of Plans and estimate for works, supply of goods and services and mode and conditions of contracts) Rules, 2024 ordered in G.O.(Ms) No.106, Rural Development and Panchayat Raj (PR-1) Department, dated 22.06.2024 shall be followed as regards the Tender Inviting Authority and Accepting Authority.

All the maintenance / repair works within a school campus shall be treated as one package for tendering purpose. For example, the school building repair, the toilet-building repair, the kitchen shed building repair in the same school will be grouped into one package and the tender shall be invited for the package.

## 9. IMPLEMENTATION PROCEDURES

Measurements and Check measurements of works sanctioned under this scheme shall be recorded as per G.O.(Ms) No.106, Rural Development and Panchayat Raj (PR-1) Department, dated 22.06.2024.

## 10. FUNDS

Funds will be allocated by the Commissioner of Rural Development and Panchayat Raj to the districts as per the requirements based on actual estimates

www.Padasalai.Net

received from the District Collectors. The Commissioner of Rural Development and Panchayat Raj will keep funds in the Single Nodal Account (SNA) opened for this purpose and will authorise expenditure based on the progress.

**11. QUALITY CONTROL**

The Executive Agency shall maintain site order book and a quality control register for testing of all construction materials used and item of works executed as required and it should be periodically verified by the inspecting officers. Apart from in house quality control mechanism, an independent third Party Quality Monitors i.e. State Quality Monitors (Schemes) shall be deputed for monitoring the quality of works executed under this Scheme.

**12. DOCUMENTATION**

Documentation should be done detailing various processes in the implementation of the Scheme, starting from identification of the works, during execution of works up to the completion. Once the work is over, the fact that the school repair/renovation works has been completed, the name of the Scheme i.e., **School Infrastructure Upgradation Scheme (SIUS)** should be prominently displayed in Tamil along with the amount incurred on a portion of the building renovated. High Resolution photographs should be sent to the Directorate of Rural Development and Panchayat Raj immediately after completion of the works to the official mail id.

**13. AMENDMENT TO GUIDELINES**

The Additional Chief Secretary to Government, Rural Development and Panchayat Raj Department, in consultation with the Commissioner of Rural Development and Panchayat Raj, is empowered to modify any of the above guidelines based on exigencies that may arise from time to time.

**GAGANDEEP SINGH BEDI**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**// TRUE COPY //**

**SECTION OFFICER**

www.Padasalai.Net